# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 169/2002

Deposition of **P.W.-3** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench clerk of this court, on 05.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : மாதேஸ்வரன் Father's Name : செல்லமுத்து

துவக்க நேரம் : 12.32 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பபட்டார்.

**வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**: நான் இவ்வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் ஆவேன். நான் தாவா சொத்தை அளவீடு செய்யும்போது புகைப்படங்கள் எனது கைப்பேசிமூலம் எடுத்தேன். மேற்கண்ட புகைப்படங்கள், ரசீது மற்றும் CD-ஐ எனது அறிக்கையுடன் தாக்கல செய்துள்ளேன். புகைப்படங்கள் **Ex.C6-** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (நீதிமன்ற ஆணையர் அவர்களால் பிரிவி 63(4) BSA-ன் கீழ் சான்று தாக்கல் செய்யப்பட்டது). நான் தாக்கல் செய்த CD **Ex.C7-**ஆகவும், ரசீது **Ex.C8-** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

1. தாவா சொத்தை நான் முதலில் கடந்த 23.06.2002 அன்று பார்வையிட்டேன் என்றால் சரிதான். நான் பார்வையிட்டபோது தாவா சொத்தின் வடபுறத்தில் கிழமேலாக 35 அடி நீளம் இருந்தது என்றால் சரிதான். அதுபோல் தாவா சொத்தின் தென்வடல் அளவு 49 அடி 10 செ.மீ இருந்தாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரும் மனுவில் கண்டுள்ள அளவுகளும், எனது வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளும் வெவ்வேறானவை என்றால் சரிதான், நான் அளவீடு செய்தபோது இருந்த அளவைதான் குறிப்பிட்டுள்ளேன்.

2. தாவா சொத்தை நான் இரண்டாவது முறை பார்வையிட்டபோது முதலில் பார்வையிட்டபோது இருந்த கட்டிங்கள் இல்லை என்றால் சரிதான். தற்பொழுது புதிதாக 2 தார்சு வீடுகள் அதே அளவுகள் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த 2-வது அறிக்கையில் வாதிகளின் 2 வீடுகளின் அளவுகளை குறிப்பிட்டுள்ளேனா என்றால் தாவா 1-வது அயிட்ட சொத்தின் அளவு 52.6 அடி எனவும், தாவா 2-வது அயிட்ட சொத்து அளவு 13.2 அடி எனவும் குறிப்பிட்டுள்ளேன்.

3. எனது அறிக்கையுடன் தாக்கல் செய்த நிலஅளவையர் வரைப்படத்தில் வாதிகளின் நிலம் ச.எண்.258/3- ல் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் நிலம் ச.எண்.258/4-ல் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரும் மனுவில் தாவா சொத்தின் ச.எண்கள்.258/3, 258/4 என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் மேற்கணட சர்வே எண்களில் உள்ள இடத்தைதான் அளவீடு செய்தேன் என்றால் இருதரப்பினர்களும் தாவா சொத்தை அடையாளம் காட்டினார்கள் இரு தரப்பினருக்கும் முன் அறிவிப்பு அனுப்பிவிட்டுதான் அளவீடு செய்தேன். இருதரப்பும் எந்தவித ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

4. நீதிமன்ற ஆணையர் கோரும் மனுவில் தாவா சொத்து ச.எண்.151/1-ல் உள்ளது என குறிப்பிட்டதாக நான் ச.எண். 258/3, 258/4 இடங்களை அளவீடு செய்தேன் என்றாலும் மேற்கண்ட இரு சர்வே எண்களுக்கும் என்ன தொடர்பு என தெரிந்துகொண்டேனா என்றால் நிலஅளவையர் ஆவணங்களின் அடிப்படையில்தான் அளவீடு செய்தேன், இருதரப்பும் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. மனுவில் குறிப்பிடாத சர்வே எண்களில் உள்ள நிலங்களை அளவீடு செய்துள்ள நிலையில் ச.எண். 258/3, 258/4 யார் பெயரில் பதிவாகியுள்ளது என்ற விவரத்தை நிலஅளவையரிடம் கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் அது எனது பணி அல்ல.

5. நான் அளவீடு செய்தபோது நிலஅளவையரிடம் ச.எண்.151/1-ல் உள்ள இடத்தை அளவீடு செய்ய கேட்டேனா என்றால் நான் அளவீடு செய்த இடத்தை பற்றி இரு தரப்பு

எந்த ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. எனக்கு நீதிமன்றத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மீறி தவறான சொத்தை அளவீடு செய்து அறிக்கையும், வரைப்படத்தையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமில்லை. மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தைதான் நான் அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே தவறான அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை அளவீடு செய்தபோது இரு தரப்பினரும் இருந்து அடையாளம் காட்டியதுபேரில்தான் அளவீடு செய்தேன்.

6. நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை வருவாய் ஆவணங்களின் அடிப்படையிலும் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கேள்வி அவதூறான கேள்வி ஆகும். பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தவறான அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிலஅளவையரும், வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் ஆக்கிரமிப்பு பகுதிளை குறிப்பிட்டு காட்டியுள்ளார்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 01.08 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.169/2002, Dt.05.02.2026.